**மாலிம்பட பிரதேச சபை**
**மாத்தறை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 31 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 31 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஜூலை 26 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்ந்து மாலிம்பட பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

(அ) மாகாண குறிப்பிட்ட நிதியேற்பாடுகளின் கீழ் கொள்வனவு செய்திருந்த டிரக்டர் வண்டியினதும் டேலரினதும் பெறுமதியாகிய ரூபா 1,500,000 இனை கிடைக்க வேண்டிய மூலதன உதவியில் கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஆ) சபையில் கடமையாற்றிய தற்காலிக தொழிலாளர் ஒருவர் தொடர்பாக ஊழியர் சேமலாப நிதியத்திற்கு செலுத்துவதற்கு நேரிட்டிருந்த ரூபா 86,220 இற்கான மிகை விதிப்பு தொகை நிதிக்கூற்றுக்களில் காட்டப்படவில்லை.

(இ) கடந்த ஆண்டு மாலிம்பட நூலகத்தை சுற்றி மதில் நிர்மாணிப்பதற்காக செலுத்தியிருந்த ரூபா 817,521 இற்கான தொகையினை மூலதனப்படுத்தியிருக்கவில்லை.

(ஈ) 2011 ஆகஸ்ட் மாதத்தில் நன்கொடையொன்றாக சபைக்கு கிடைத்திருந்த ரூபா 34,500 தொகை பெறுமதியான 18.93 பர்சஸ் அளவான காணியின் பெறுமதியினை நிதிக்கூற்றுக்களுக்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 2015 ஆண்டிற்காக கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 232,999 தொகையினால் மிகையாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

#### 1.3.2 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு கூட்டுத்தொகை ரூபா 32,608,105 தொகைக்கான கடன்பட்டோர் மீதியில் 03 வருட காலத்தை மிகைத்துள்ள ரூபா 3,898,736 இற்கான 27 மீதிகள் அடங்கியிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு கூட்டுத்தொகை ரூபா 9,267,664 இற்கான செலுத்த வேண்டிய கணக்கு மீதியில் 03 வருட காலத்தை மிகைத்துள்ள ரூபா 1,559,886 இற்கான 26 மீதிகள் அடங்கியிருந்தன.

### 1.3.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

கூட்டுத்தொகை ரூபா 105,595,281 தொகைக்கான காணிகள் மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக உருத்துறுதிகள் ரூபா 3,112,855 தொகைக்கான பலவின கடன்பட்டோர் மற்றும் ரூபா 9,033,803 தொகைக்கான பலவின கடன்கொடுத்தோர் தொடர்பாக மீதிகள் உறுதிப்படுத்தும் கடிதம் மற்றும் காலப்பகுப்பாய்வுகளும், ரூபா 2,831,387 தொகைக்கான 06 வகையான வைப்புக்கள் தொடர்பாக விரிவான அட்டவணைகள் ஆகிய சான்றுகள் சமர்ப்பிக்காமையால் கணக்காய்வின் போது அவற்றை திருப்திகரமாக பரிசோதனை மேற்கொள்ள முடியாதிருந்தது.

### 1.3.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மை

இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணங்கள் 571 இன் பிரகாரம் காலங்கடந்த ரூபா 853,525 தொகைக்கான பலவின வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 15,200,750 ஆகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 4,527,409 ஆகக் காணப்பட்டது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 10,673,341 இற்கான வளர்ச்சி ஒன்றினைக் காட்டியது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்கான மொத்த மீண்டுவரும் வருமானத்தின் 62 சதவீதம் அளவில் மொத்த மீண்டுவரும் செலவுகள் காணப்பட்டதென அவதானிக்கப்பட்டது.

(ஆ) சபையினால் சுயமாக உருவாக்கிய வருமானத்தை மிகைத்து மூன்று வருடங்களிலும் கணிசமான பெறுமதிகளில் மீண்டுவரும் செலவுக் அதிகரித்திருந்ததுடன், சுயமாக உருவாக்கிய வருமானங்களின் மூலம் செலவுகளை மேவகை செய்வதற்காக இயலாத நிலைமை ஒன்றினைக் காட்டியது.

### 2.3 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்

நடைமுறை மற்றும் விரைவு விகிதாசாரம் 1:4.3 எனக் காட்டப்பட்டிருந்த போதிலும் கடன்பட்டோர் மீதியில் ரூபா 4,652,878 இற்கான பெற வேண்டிய மூலதன உதவியும், அவற்றில் பெற வேண்டிய முத்திரைக் கட்டணம் 65 சதவீதமாக காணப்பட்டமையால் அவ் விகிதாசாரத்தின் பிரகாரம் திரவத்தன்மை நிலைமையொன்று காணப்படவில்லை என அவதானிக்கப்பட்டது.

**2.3.1 வருமான நிருவாகம்**

**2.3.2 வீதவரி**

ஆரம்ப வீதவரி நிலுவை மீதி ரூபா 91,579 தொகையாக இருந்ததுடன் ஆண்டிற்கான சிட்டையிடலுடன் ரூபா 237,474 தொகையொன்று அறவிடப்பட வேண்டியிருந்தது. மொத்த அறவீடுகள் ரூபா 162,136 தொகையாக இருந்தமையால் 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 75,338 இற்கான மீதியொன்று நிலுவையாகக் காணப்பட்டது.

**2.3.3 வாடகை**

ஆரம்ப நிலுவைக் கடை வாடகை மீதி ரூபா 121,520 தொகையாகக் காணப்பட்டதுடன் ரூபா 1,388,018 இற்கான சிட்டையிடலுடன் ரூபா 1,509,538 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. மொத்த அறவீடுகள் ரூபா 1,416,318 தொகையாகக் காணப்பட்டமையால் வருட இறுதியில் உள்ளவாறு நிலுவை மீதி ரூபா 93,220 தொகையாக இருந்தது.

**2.3.4 வியாபார வரி**

ஆரம்ப நிலுவை வியாபார வரி மீதி ரூபா 13,800 தொகையாக இருந்ததுடன் சிட்டையிடல் ரூபா 626,990 தொகையுடன் ரூபா 640,790 தொகை ஒன்று அறவிடப்பட வேண்டியிருந்தது. மொத்த அறவீடுகள் ரூபா 623,990 ஆகக் காணப்பட்டமையால் வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 16,800 இற்கான தொகையொன்று நிலுவையாகக் இருந்தது.

**2.3.5 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப்பணமாக ரூபா 1,153,302 தொகை மற்றும் முத்திரைக் கட்டணமாக ரூபா 26,972,487 தொகை கிடைக்க வேண்டியிருந்தது.

**3. செயற்பாட்டுத் திறமையின்மை**

**3.1 செயலாற்றுகை மதிப்பீடு**

மீளாய்வாண்டிற்கான பாதீட்டின் பிரகாரம் சபை நிதியத்தில் இருந்து 61 அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் செயற்படுத்துவதற்காக அங்கீகாரம் கிடைத்திருந்த போதிலும், ஆண்டின் போது ஒரு அபிவிருத்தித் திட்டம் மாத்திரம் செயற்படுத்தப்பட்டிருந்தது. எனினும் சபையின் மாதாந்த சராசரி காசு மீதி ரூபா 4,044,934 தொகையாகக் காணப்பட்டதுடன் அதன் பிரகாரம் நிர்மாண வேலைகள் மேற்கொள்ளக்கூடிய நிதி நிலைமையொன்று சபைக்குக் காணப்பட்டது.

**3.2 முகாமைத்துவத் திறமையின்மை**

இரண்டாம் தர மற்றும் ஆரம்ப தர பதவிகளில் காணப்பட்ட 02 வெற்றிடங்களை நிரப்புவதற்கு அல்லது பதவிகளில் காணப்பட்ட 04 மிகை பதவியணியினை முறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அவ்வாறு இருக்கும் போது பிரதியீட்டு அடிப்படையில் மேலும் 06 ஊழியர்களை சேவையில் ஈடுபடுத்தி சம்பளங்கள் மற்றும் படியாக ரூபா 1,255,476 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது.

**3.3 சர்ச்சைக்குரிய தன்மையுள்ள கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபைக்குச் சொந்தமான பாதை செப்பனிடும் உருளை தனியார் வர்த்தகர் ஒருவருக்கு குத்தகைக்கு வழங்கியிருந்த போதிலும், மீளாய்வாண்டு இறுதி வரை, பிணை வைப்புத் தொகை ரூபா 22,900 தொகை மற்றும் 70 இயந்திர மணித்தியாலங்களுக்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 105,000 இற்கான தொகையொன்று சபைக்கு கிடைக்க வேண்டியிருந்தது.

(ஆ) (i) மாலிம்பட அலவத்த ஹேன மையவாடியில் தகனசாலை ஒன்று நிர்மாணிப்பதற்காக 2000 ஜனவரி 08 திகதி உள்ளூராட்சி அமைச்சில் இருந்து கிடைத்திருந்த ரூபா 1,000,000 தொகையில் ஒப்பந்தக் கம்பனிக்கு ரூபா 100,000 தொகை செலுத்தியிருந்தது. குறிப்பிட்ட பணம் செலுத்தி 17 வருடங்கள் கழிந்துள்ள போதிலும் நிர்மாண வேலை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) மீதியாக உள்ள ரூபா 900,000 தொகையினை சபையின் பேரில் திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்து ரூபா 3,921,386 தொகையொன்று உழைத்திருந்த போதிலும் நிர்மாண வேலைக்கான மதிப்பீட்டுத் தொகை ரூபா 13,430,000 தொகையினால் அதிகரித்திருந்தது.

(iii) தகனசாலை நிர்மாணிப்பதற்காக 1999 ஏப்ரல் 26 ஆம் திகதி காணி ஒன்று பெற்றிருந்த போதிலும், அக் காணியிலும் தகனசாலை நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.4 விளைவற்ற / குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபைக்குச் சொந்தமான 09 ஏக்கர் 01 ரூட் 36 பர்சஸ் தொகைக்கான 10 காணித் துண்டுகள் பயன்படுத்தப்படாது காணப்பட்டதுடன் சபைக்குச் சொந்தமான 38 காணித் துண்டுகளின் எல்லைகளை அடையாளமிட்டு பாதுகாப்பதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) சபையினால் கொள்வனவு செய்திருந்த ரூபா 175,644 தொகை பெறுமதியான கொங்கிரீட் அச்சுக்கல் இயந்திரம் 2012 ஆண்டு முதல் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது.

**3.5 திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவத்திற்காக 2012 ஆண்டு முதல் 2016 இறுதி வரை ரூபா 2,786,399 தொகையொன்று செலவிடப்பட்டிருந்ததுடன், 2011 ஆண்டு முதல் மத்திய சுற்றாடல் அதிகார சபையில் இருந்து கிடைத்திருந்த நிதியேற்பாடுகளின் மீது ரூபா 6,114,025 தொகை செலவிடப்பட்டு சேதனப் பசளை செயற்களம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது, எனினும் கடந்த ஆண்டு மற்றும் மீளாய்வாண்டின் போது சபையினால் முறையே சேதனப் பசளை 19,235 கிலோகிராம்கள் மற்றும் 28,140 தொகை மாத்திரம் உற்பத்தி செய்யப்பட்டிருந்தது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்காக பாதீட்டிலுள்ள 08 செலவு விடயங்களின் கூட்டுத்தொகை ரூபா 15,692,031 இற்கான சேமிப்பும் இரண்டு செலவு விடயங்களில் பிரதிகூலமான முரண்களின் கூட்டுத்தொகை ரூபா 5,441,013 தொகையும் காணப்படாமையால் பாதீடு ஆக்கபூர்வமான நிதி முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

இலங்கை அரச நிதிப் பிரமாணங்கள் 133 மற்றும் 134 இல் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகள் மற்றும் தென் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் 2014 பெப்ரவரி 24 திகதிய த.ப.பா/யஹ/01/ந.ச.லே இலக்கங் கொண்ட சுற்றறிக்கைகளின் பிரகாரம் போதியளவு உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் சபையினால் நியமிக்கப்பட்டிருந்த உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தருக்கு மீளாய்வாண்டின் போது சம்பளங்கள் மற்றும் படிகள் என ரூபா 492,445 இற்கான தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது.

### 4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவினை செயற்படுத்துதல்

2000 மார்ச் 15 ஆம் திகதிய பீஎன்/பீஈ/பீ.7 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையை சுட்டிக்காட்டி 2004 திசெம்பர் 22 திகதி உள்ளூராட்சி உதவி ஆணையாளரினால் வெளியிட்டிருந்த மார/வாச/வி/க இலக்கம் கொண்ட கடிதத்தின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நிறுவப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

(அ) கணக்கீடு
(ஆ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(இ) வருமான நிருவாகம்
(ஈ) பாதீட்டுக் கட்டுப்பாடு